RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING | மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 197 | ஜூலை.20 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5




## வளர்ச்சி அடைந்த பிஹாரை உருவாக்க மத்திய அரசு தீவிரம்: பிரதமர் மோடி உறுதி

பாட்னா: ஜூலை.20-

வளர்ச்சி அடைந்த மாநிலமாக பிஹாரை உருவாக்க மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசு நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் மோடி, நேற்று பிஹார் மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பிஹார் சென்ற பிரதமர் மோடியை, முதல்வர் நிதிஷ்குமார், துணை முதல்வர்கள் சாம்ராட் சவுத்ரி, விஜய் சின்ஹா உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து மோதிஹரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுமார் ரூ.7,200 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

மேலும், பாட்னாவில் இருந்து டெல்லி, மோதிஹரியில் இருந்து டெல்லி, தர்பாங்காவில் இருந்து லக்னோ, மால்டா நகரில் இருந்து லக்னோவுக்கு இடையிலான அம்ரித் பாரத் ரயில் சேவைகளை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

முன்பு இருந்த காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தள அரசுகள் பிஹார் மாநிலத்தைப் புறக்கணித்தன. இதனால் அந்த மாநிலத்துக்கு நிதி ஒதுக்குவதில் அந்த அரசுகள் சுணக்கம் காட்டின. பிஹாரில் நிதிஷ்குமார் அரசு அமைந்தபோது, மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு போதுமான நிதியை ஒதுக்கவில்லை. பாரபட்சமாக நிதி ஒதுக்கியது. ஆனால் பாஜக தலைமையில் ஆட்சி அமைந்தபோது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. பிஹார் மாநிலத்துக்குத் தேவையான அனைத்து நிதி உதவியையும் செய்து கொடுத்தோம். இதனால் பிஹார் மாநிலம் வளர்ச்சி அடைந்துள்ளது.

பிஹார் மாநிலத்தை வளர்ச்சி பெற்ற பிஹாராக நாம் மாற்றவேண்டும். தற்போது பிஹாரில் அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதற்கு மத்திய, மாநில அரசுகள் ஒன்றாக இணைந்து செயல்படுவதே காரணம். காங்கிரஸ் தலைமையில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசு 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தபோது பிஹாருக்கு ரூ.2 லட்சம் கோடி நிதி மட்டுமே கிடைத்தது.

பிஹார் வளமாக இருந்தால், நாடு வளமாக இருக்கும். பிஹார் இளைஞர்கள் வளமாக இருந்தால், பிஹார் வளமாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டே மத்திய அரசுக்கு ஆதரவாக முதல்வர் நிதிஷ் குமார் தலைமையிலான அரசு செயல்படுகிறது. இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## ‘காமராஜரை மக்கள் மனங்களில் இருந்து அகற்ற திமுக உளவியல் யுத்தம்’ : வானதி சீனிவாசன் விமர்சனம்

கோவை: ஜூலை.20-

“பெருந்தலைவர் காமராஜரை தமிழக மக்கள் மனங்களில் இருந்து அகற்ற திமுக நடத்தும் உளவியல் யுத்தமே திருச்சி சிவாவின் பேச்சு,” என பாஜக தேசிய மகளிரணி தலைவரும், கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏவுமான வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னையில் நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் துணைப் பொதுச்செயலாளரும், மாநிலங்களவை திமுக குழுத் தலைவருமான திருச்சி சிவா, எளிமை, தியாகம், வளர்ச்சிக்காக பேசப்படும் பெருந்தலைவர் காமராஜரை, ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தது போன்ற பிம்பத்தை கட்டமைக்க முயற்சித்துள்ளார்.

இதற்கு பலரும் கண்டனம் தெரிவிக்க, பதில் அறிக்கை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், பெருந்தலைவர் காமராஜர் குறித்து திருச்சி சிவா பேசியது உண்மை என்பது போலவும், அதை எதிர்க்கட்சிகள் திரித்து கலகமூட்டுவது போல கருத்துகளை தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாடு என்றாலே பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோர் மட்டுமே நினைவுக்குவர வேண்டும், அவர்கள் மட்டுமே தமிழ்நாட்டிற்காக உழைத்தவர்கள் என்ற பிம்பத்தை கட்டமைக்க வேண்டும் என்பதே திமுகவின் திட்டம். அதன் ஒரு பகுதிதான் திருச்சி சிவாவின் பேச்சு. தமிழ்நாட்டின் இன்றைய வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட, கல்வி, தொழில், நீர்ப்பாசனம் என பல்வேறு துறைகளில் பெரும் புரட்சி செய்த, 'வளர்ச்சி நாயகன்' காமராஜர்.

அப்படிப்பட்ட பெருந்தலைவர், தனக்கு ஏ.சி. அறை வேண்டும் என்பதற்காக கருணாநிதியிடம் தூது அனுப்பினார் என்பது போல திமுகவினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர். திமுகவின் இந்த சூழ்ச்சியை அறிந்திருந்தும், சில எம்.பி, எம்.எல்.ஏ. பதவிக்காக காமராஜரையே துறக்க, காங்கிரஸ் கட்சியினர் துணிந்து விட்டனர்.

காமராஜர் மறைந்தபோது, அவரது உடலை மெரினா கடற்கரையில் அடக்கம் செய்ய மறுத்தவர் அப்போது முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி. 9 ஆண்டுகள் முதல்வராக இருந்த, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தலைவர் காமராஜருக்கு மெரினா கடற்கரையில் நினைவிடம் இல்லை. இதற்கு காரணமானவர்களுடன் இப்போது காங்கிரஸ் கூட்டணி வைத்துள்ளது.


பெருந்தலைவர் காமராஜரின் புகழுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் பல்வேறு அவதூறுகளை பரப்ப துவங்கியுள்ளனர். இது பெருந்தலைவர் காமராஜரை, தமிழக மக்களின் மனங்களில் இருந்து அகற்ற திமுக நடத்தும் 'உளவியல் யுத்தம்'. அதன் ஒரு பகுதியே திருச்சி சிவாவின் பேச்சு. மூதறிஞர் ராஜாஜி மீது அவதூறு பரப்பி, அதில் வெற்றி கண்டவர்கள், இப்போது பெருந்தலைவர் காமராஜரை கையில் எடுத்து இருக்கிறார்கள். ஆனால் பெருந்தலைவர் காமராஜரிடம் திமுக தோற்றுப் போகும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூதாட்ட செயலி வழக்கு: கூகுள், மெட்டா நிறுவனங்களுக்கு அமலாக்கத் துறை சம்மன்

புது டெல்லி: ஜூலை.20-

சூதாட்ட செயலிகள் தொடர்புடைய பணமோசடி வழக்கில், கூகுள் மற்றும் மெட்டா நிறுவனங்களுக்கு அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியுள்ளது.

சூதாட்ட செயலிகள் தொடர்புடைய பணமோசடி வழக்கு விசாரணைக்காக ஜூலை 21 ஆம் தேதி டெல்லியில் உள்ள அமலாக்கத் துறை தலைமையகத்தில் ஆஜராகுமாறு கூகுள், மெட்டா நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.



பணமோசடி தடுப்புச் சட்டத்தின் (PMLA) விசாரணை வளையத்துக்குள் உள்ள சட்டவிரோத சூதாட்ட செயலிகளை விளம்பரப்படுத்துவதில் கூகுள், மெட்டா ஆகிய டிஜிட்டல் தளங்களின் பங்கு குறித்து அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது. "கூகுள் மற்றும் மெட்டா தளங்கள், விளம்பரங்கள் மூலமாக சூதாட்ட செயலிகளை விளம்பரப்படுத்தி பயனர்களை சென்றடைய உதவுகின்றன" என்று அமலாக்கத் துறை தரப்பில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது

சட்டவிரோத சூதாட்ட செயலிகளான வி மணி, விஎம் டிரேடிங், ஸ்டாண்டர்டு ட்ரேடர்ஸ் லிமிட்டட், ஐபுள் கேபிட்டல் லிமிட்டட், லோட்டஸ் புக், 11ஸ்டார்ஸ் மற்றும் கேம்பெட் லீக் ஆகிய நிறுவனங்களை அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது. இந்த ஆன்லைன் சூதாட்ட செயலிகள் தொடர்பான வழக்கில் மும்பையில் நான்கு இடங்களில் சோதனை நடத்தி, கணக்கில் வராத ரூ.3.3 கோடி பணத்தையும், ஆடம்பர வாட்ச்கள், நகைகள், வெளிநாட்டு கரன்சிகள் மற்றும் சொகுசு வாகனங்களையும் அமலாக்கத் துறை சமீபத்தில் பறிமுதல் செய்தது.

முன்னதாக, சூதாட்ட செயலிக்கு விளம்பரம் செய்தது தொடர்பாக நடிகர்கள் பிரகாஷ் ராஜ், ராணா, விஜய் தேவரகொண்டா உட்பட 29 நடிகர், நடிகைகள், பிரபலங்கள், விளையாட்டு வீரர்களிடம் விசாரணை நடத்த அமலாக்கத் துறை முடிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

## விஜய்க்கு ‘வலை’, சீமானுக்கும் ‘சிக்னல்’ இபிஎஸ் நகர்வின் வியூகம் என்ன?

சென்னை, ஜூலை.20-

2026 சட்டப்பேரவை தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணத்தை தொடங்கியுள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, இப்போது தவெக தலைவர் விஜய்யையும் கூட்டணிக்குள் கொண்டுவர வலைவீசியுள்ளார். அப்படியே சீமானுக்கும் சிக்னல் காட்டியுள்ளார்.

இப்போதைய நிலையில் திமுக கூட்டணி கிட்டத்திட்ட உறுதியாகிவிட்டது. காங்கிரஸ், விசிக, இடதுசாரிகள், மதிமுக, மமக, ஐயுஎம்எல், கொமதேக என அந்தக் கூட்டணி கட்சிகள் திமுகவோடு பயணிக்க தயாராகிவிட்டன. ஆனால், ஆளும் திமுகவை எதிர்க்கும் கட்சிகள் மூன்று அணியாக சிதறிக்கிடக்கின்றன. அதில், பிரதான எதிர்க்கட்சியான அதிமுக கூட்டணியில் தற்போது பாஜக, தமாகா மட்டுமே இடம்பெற்றுள்ளன. அடுத்து விஜய்யின் தவெக மற்றும் சீமானின் நாதக கட்சிகள் தனித்தனியாக போட்டியிட முடிவெடுத்துள்ளன. எனவே இப்போதைய சூழலில் திமுகவை எதிர்த்து 3 அணிகள் களமிறங்குகின்றன.

ஆளும் திமுக அணிக்கான வாக்குகள் ஒன்றாக திரளும்போது, திமுகவுக்கு எதிரான வாக்குகள் மூன்றாக சிதறுவது தங்களின் வெற்றிக் கனவை சிதைக்கும் என அச்சப்பட தொடங்கியுள்ளது அதிமுக. இதனால்தான் இப்போது விஜய்க்கும் தூண்டில் வீச ஆரம்பித்துள்ளார் இபிஎஸ்.



சமீபத்தில் ஒரு செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த எடப்பாடி பழனிசாமி, விஜய்யோடு கூட்டணி குறித்து பாசிட்டிவாக பேசினார். அதேபோல திமுகவை எதிர்க்கும் சீமான் ஓரணியில் வரவேண்டும் என்றும் தன் விருப்பத்தை தெரிவித்திருக்கிறார். இது விஜய், சீமானை கூட்டணிக்குள் வரவேற்க இபிஎஸ் தயாராகிவிட்டதை காட்டுகிறது.

சில நாட்களுக்கு முன்பு ‘ஒரு பிரம்மாண்டமான கட்சி’ எங்கள் கூட்டணிக்குள் வருகிறது என்றார் இபிஎஸ். அந்த பிரம்மாண்ட கட்சி தவெகதானோ என்ற சந்தேகம் வலுக்க ஆரம்பித்துவிட்டது. தவெகவுடன் அதிமுக கூட்டணி வைக்கப் போகிறது என்ற பேச்சு படபடத்த நிலையில், உடனடியாக ‘நிரந்தர எதிரியான பாஜகவுடன் கூட்டணியில் உள்ள எந்த கட்சியுடனும் சேரமாட்டோம்’ என அறிக்கை விட்டுள்ளது தவெக.

ஆனாலும், பாஜக, திமுகவை கடுமையாக விமர்சித்து வரும் தவெக தரப்பு, இப்போதுவரை ஒரு வார்த்தை கூட அதிமுகவை விமர்சிக்கவில்லை. இதன் மூலமாக அதிமுகவை தனது நட்பு சக்தியாகவே தவெக பார்க்கிறது என்று புரிந்துகொள்ளலாம்.

இருப்பினும், அதிமுக அணியில் தவெக இடம்பெறுவதற்கு தடையாக இருப்பது பாஜகதான். ஒருவேளை பாஜகவோடு அதிமுக கூட்டணி உறுதியாகாவிட்டால், இந்நேரம் அதிமுக தவெக கூட்டணி அமைந்திருக்கும் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். இதனை உணர்ந்தே பாஜக தடாலடியாக அதிமுகவை கூட்டணியில் சேர்த்தது எனவும் சொல்கின்றனர்.

உண்மையாக, தவெகவை கூட்டணிக்குள் கொண்டுவருவதுதான் இபிஎஸ்சின் நோக்கமா அல்லது ‘கூட்டணி ஆட்சி’ என தொடர்ந்து குட்டையை குழப்பி வரும் பாஜகவுக்கு ‘செக்’ வைக்கும் விதமாக இந்த ரூட்டை அவர் எடுத்துள்ளாரா என்ற கேள்வியும் எழுகிறது.

கூட்டணி ஆட்சி, 50க்கும் மேற்பட்ட தொகுதிகள் பாஜக தலைவர்கள் இப்போதே குடைச்சல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். எனவே, என் கையில் இன்னொரு ஆப்ஷனும் இருக்கிறது எனக் காட்டவே, விஜய்க்கு அழைப்பு விடுத்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி என்கிறார்கள்.

‘தேர்தல் நேரத்தில் எல்லாம் சாத்தியம்’ என்ற ஃபார்முலாவோடு, அதிகம் குடைச்சல் கொடுக்கும் பாஜகவை கழட்டிவிட்டு தவெக, நாதக கூட்டணியை உருவாக்கும் ‘பிளான்பி’யை இப்போதே கையில் எடுத்துவிட்டார் இபிஎஸ். இது தவெகவுக்கான அழைப்பு மணி என்பதைவிட, பாஜகவுக்கான எச்சரிக்கை மணி என்பதே உண்மை.

அதேபோல, சீமானும் ‘திராவிட கட்சிகள், தேசிய கட்சிகளோடு அறவே கூட்டணி இல்லை’ எனச் சொல்லி வருகிறார். இதனால் அவரும் அதிமுகவோடு கூட்டணி வைக்க வாய்ப்பில்லை என்றே சொல்லப்படுகிறது. ஆனாலும், திமுகவை விமர்சிப்பதை போல அதிமுகவை சீமான் விமர்சிப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் தொடர்ந்து வைக்கப்படுகிறது.

சீமானுக்கு அதிமுக மீது ஒரு ‘சாஃப்ட் கார்னர்’ உண்டு என்று திமுக தரப்பே அடிக்கடி விமர்சித்து வருகிறது. ஒருவேளை, பாஜக கூட்டணியில் இல்லாதபட்சத்தில் அதிமுகவோடு சீமான் சேருவதற்கு ஓரளவு வாய்ப்பு உள்ளது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

1996ல் அதிமுக ஆட்சியை அகற்ற ரஜினியோடு கைகோத்தார் கருணாநிதி. அதேபோல 2011 ல் திமுக ஆட்சியை அகற்ற, தன் பிடிவாதத்தை தளர்த்தி விஜயகாந்தோடு கூட்டணி அமைத்தார் ஜெயலலிதா. இப்படி கடந்த கால வரலாறுகளை கணக்குப்போட்டுதான், விஜய்யோடு சேர ஆயத்தமாகிறார் இபிஎஸ். அதற்கு காலமும், கூட்டணி கணக்குகளும், முக்கியமாக பாஜகவும் வாய்ப்பை உருவாக்குமா என பொறுத்திருந்து பார்ப்போம்.

## குரூப் 2 தேர்வு மதிப்பெண், தரவரிசை வெளியீடு வரும் 28ம்தேதி முதல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு

சென்னை, ஜூலை.20-

குரூப் 2 தேர்வு மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை வெளியீடு அடிப்படையில் வரும் 28ம் தேதி முதல் ஆகஸ்ட் 1ம் தேதி வரை சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு நடைபெறும் என்று டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது. இதுகுறித்து டிஎன்பிஎஸ்சி வெளியிட்ட அறிக்கை: ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள்மிமி தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் கடந்த மே 5ம் தேதி தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.



மேற்குறிப்பிட்டுள்ள அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு வரும் 28ம் தேதி முதல் ஆகஸ்ட் 1ம் தேதி வரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் எண்.3 தேர்வாணைய சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை 600 003ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள், நேரம் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய அழைப்பாணையை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான (www.tnpsc.gov.in) லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் தேர்வர்களுக்கு அதற்கான விவரம் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது.

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது. தேர்வர்கள் மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் கலந்துகொள்ள தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# வேலூரில், மகேந்திரா ஜெயின் கார்ஸ் சார்பில் புதிய வகை கார் அறிமுகம்

வேலூர், ஜூலை.20-
வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த வெங்கடாபுரம், மகேந்திரா ஜெயின் கார்ஸ் சார்பில் புதிய வகை மகேந்திரா எக்ஸ்யுவிஏ எக்ஸ் ஒ ஆர் இ வி எக்ஸ் என்ற புதிய வகை கார் அறிமுக விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வெங்கடாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் பாபு, வேலூர்.ஒ.செ. திமுக ஞானசேகரன், ஜெயின் கார்ஸ் எம்.டி. சுசில்மேத்தா, நிர்வாக இயக்குனர் சரேஷ்குமார் மேத்தா, சிஇஓ திருநாவுக்கரசு, ஜெயின் கார்ஸ் நிறுவன ஹெச்.ஆர். மற்றும் அட்மின் வெங்கடராமன் மற்றும் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் என பலர் கலந்து கொண்டு இந்த அறிமுக விழாவை சிறப்பித்தனர்.



# தாம்பரத்தில் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட மகளிரணி தலைமை சார்பில் சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது

தாம்பரம், ஜூலை.20-
செங்கல்பட்டு வட மேற்கு மாவட்டம் தமிழக வெற்றி கழக சார்பில் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மேற்கு தாம்பரத்தில் முத்துரங்கம் பூங்காவில் அமைந்துள்ள அருள்மிகு நாகேஸ்வரி அம்மன் திருக்கோவில் வளாகத்தில் செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட செயலாளர் கில்லி டி.சரத்குமார் அவர்களின் அறிவித்துள்ளின்படி மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி ஷீபா தலைமையில் தமிழக வெற்றி கழகத்தின் பொது செயலாளர் என்.ஆனந்த் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு வழிபாடு செய்து மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் பொருளாளர் ராஜேந்திரன் பகுதி நிர்வாகி பிரவீன் குமார், ஒன்றிய நிர்வாகி மணிகண்டன், பாலாஜி, செல்வம், டில்லி, இந்துமதி, விக்டோரியா, மகாலட்சுமி, லட்சுமி, பூங்கோதை உட்பட தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பு வழிபாடு செய்து அன்னதானம் வழங்கினார்கள்



# கல்லலில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி

கல்லல், ஜூலை.20-
சிவகங்கை மாவட்டம் கல்லலில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. ராம்ராக் நினைவு பாசறை நிறுவனர் சந்திரமோகன் தலைமை வகித்தார். தமிழ்ந ாடு அறிவியல் இயக்க கல்லல் கிளைத் தலைவர் தனுஷ் ஸ்டாலின் உலக திருக்குறள் கூட்டமைப்பின் சிவகங்கை மாவட்ட மண்டல இயக்குனர் வனிதா முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி வரவேற்புரை யாற்றினார். திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் அமுதா ராஜேஸ்வரி லட்சுமி நடுவர்களாக சிறப்பாக பணியாற்றினார்கள். அரசு உயர்நிலைப்பள்ளி கல்லல் கோவிலூர் பாகனேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி குருந்தம்பட்டு சகாயராணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி சூசையப்பர் பட்டணம் முருகப்பா மேல்நிலைப்பள்ளி சாந்திராணி பதின்ம மேல்நிலைப்பள்ளி பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி கல்லல் சேது ஐராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கண்டரமாணிக்கம் கல்யாணி கிரீன் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தேவப்பட்டு ஆகிய பள்ளிகளின் மாணவ மாணவிகள் போட்டிகளில் பங்கே ற்றனர். பள்ளியின் ஆசிரியை செபஸ்தியம்மாள் உடற்கல்வி ஆசிரியர் பிரதாப் அதிகரம் செல்வகுமார் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட பொருளாளர் பிரபு நன்றி கூறினார்.

# சிவகங்கை மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர் /சமூக நல இயக்குநர் மா.செள.சங்கீதா மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக கள ஆய்வு



சிவகங்கை, ஜூலை.20-
சிவகங்கை மாவட்டம், அனைத்துத்துறைகளின் சார்பில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக, சிவகங்கை மாவட்டத்தின் புதிய கண்காணிப்பு அலுவலர் / சமூக நல இயக்குநர் மா.செள.சங்கீதா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், அனைத்துத்துறை சார்ந்த முதல்நிலை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் மேற்கொண்டு தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பொதும க்களின் தேவைகள் அறிந்து, அனைத்து அடிப்படை கட்டமைப்புக்களும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறாக, செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பயன்கள் குறித்தும் வளர்ச்சி பணிகள் குறித்தும், தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, திட்ட செயல்பாடுகள்,

மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி பணிகள் ஆகியன தொடர்பாகவும் உரிய கள ஆய்வுகள் மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்திற்கு புதிய மாவட்ட கண்காணிப்பு அலுவலராக நான் பொறுப்பேற்றுள்ளேன். சிவகங்கை மாவட்டத்தில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து நலத்திட்டங்களும், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கும் கிடைக்கப் பெறச் செய்யும் வகையில், மாவட்ட நிர்வாகத்தினால் சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணிகள் தொடர்பாகவும், பொதும க்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அனைத்துப் பகுதி களிலும் மேம்படுத்தும் விதமாகவும், நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாகவும், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் திட்ட செயல்பாடுகள் குறித்தும் கள ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ள ப்பட்டு வருகிறது. அவை தொடர்பாகவும், சம்பந்தப்பட்ட முதன்மை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, அரசின் பல்வேறு துறைகளின் சார்பில், துறை ரீதியாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் அதன் பயன்கள், தேவையான நிதிநிலைகள் மற்றும் செலவினங்கள் ஆகியன குறித்தும், துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் ஆகியன குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் இக்கலந்தாய்வு கூட்டம் இன்றைய தினம் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு துறைகளின் சார்பில் இதுவரை மேற்கொண்ட திட்டப்பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், தேவையான நிதி நிலைகள் ஆகியன தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்கள் எடுத்துரைத்து, அவைகள் தொடர்பான விவரங்களை அறிக் கையாக சமர்ப்பிக்கலாம். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைகளுடன், தங்களது துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / சமூக நல இயக்குநர் திருமதி மா.செள.சங்கீதா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒக்கூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினையும், அதனைத் தொடர்ந்து, பெருங்குடி பகுதியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகள், காஞ்சிரங்கால் பகுதியில் தோழி விடுதிக்கான நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் மற்றும் புறவழிச்சாலை மேம்பாட்டு பணிகள், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சமூக நலத்துறையின் சார்பில் செயல்பட்டு வரும் ளிஸீமீ ஷிமீஷீஜீ சிமீஸீ மீக்ஷீமீ செயல்பாடுகள் ஆகியன குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /சமூக நல இயக்குநர் திருமதி மா.செள.சங்கீதா இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் இயங்கி வரும் விடுதிகள் ஆகியவைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /சமூக நல இயக்குநர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஜி.அரவிந்த், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி கவிதப்பிரியா, இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.இராஜேந்திர பிரசாத், உதவி ஆணையர் (கலால்) திரு.ரெங்கநாதன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துக்கழுவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வி.கீர்த்தனா மணி உட்பட அனைத்துத்துறை அரசு முதல்நிலை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





## பம்மல் அண்ணா நகர் அருள்மிகு ஓம் சக்தி மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தின், 26வது ஆடி மாத கூழ் வார்த்தல் மற்றும் தீமிதி திருவிழா

பம்மல், ஜூலை.20-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பம்மல் அண்ணா நகர் அருள்மிகு ஓம் சக்தி மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தின், 26வது ஆடி மாத கூழ் வார்த்தல் மற்றும் தீமிதி திருவிழாவை முன்னிட்டு அண்ணா தி.மு.க பம்மல் வடக்கு பகுதி கழகம் சார்பில், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பம்மல் இரா.லோகநாதன் ஏற்பாட்டில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் சமபந்தி அன்னதானம் நிகழ்ச்சியை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் துவக்கி வைத்தார். உடன் முன்னாள் எம்.எல்.ஏ. ப.தன்சிங், பகுதி கழகச் செயலாளர் வெ.ஜெகநாதன் எம்.சி, மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர் ஜி.எஸ்.புருஷோத்தமன், அவைத்தலைவர் துரை. தண்டபாணி, மு. நகரமன்ற உறுப்பினர் த.முகுந்தன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் பி.ஆர்.எஸ். சரவணராஜ் மற்றும் மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவையை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்தார்

மதுரை, ஜூலை.20-
மதுரை மாநகராட்சி பைக்காரா நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவையை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு பரிசோதனை மேற்கொள்வதை பார்வையிட்டார்கள்.

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 33 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. அவற்றில். திருப்பாலை, கரிசல்குளம், செல்லூர், வண்டியூர், அன்சாரி நகர், சிந்தாமணி, முனிச்சாலை, அவனியாபுரம் மற்றும் திருநகர் ஆகிய 9 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவையின்படி சிறப்பு மருத்துவர்கள் திங்கள் முதல் சனி வரை மாலை 4.30 மணி முதல் 8.30 வரை சிகிச்சை அளிப்பார்கள். (திங்கட்கிழமை பொது மருத்துவம், செவ்வாய்க்கிழமை மகப்பேறு மருத்துவம், புதன் கிழமை குழந் தைகள் நல மருத்துவம், வியாழக்கிழமை கண் மற்றும் இயன் முறை மருத்துவம், வெள்ளிக்கிழமை தோல்நோய் மற்றும் பல் மருத்துவம், சனிக்கிழமை மனநல மருத்துவம் ஆகிய மருத்துவ பரிசோதனைகள் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக பைக்காரா மற்றும் மஸ்தான்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்நோக்கு மருத்துவ சேவை மேற்கண்ட அட்டவணையின்படி பல்துறை மருத்துவ சேவைகள் வழங்கப்பட உள்ளது.

பைக்காரா நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவையை மாண்புமிகு மேயர் அவர்கள் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வதை பார்வையிட்டார்கள். இதன் மூலம் மதுரை மாநகராட்சியின் 11 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்நோக்கு மருத்துவ சேவைகள் பொதுமக்களுக்கு விரைவான மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், நகர்நல அலுவலர் மரு.இந்திரா, சுகாதார ஆய்வாளர் திரு.சந்திரசேகர், மாமன்ற உறுப்பினர் திரு.கருப்பசாமி, மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தேனி மாவட்ட ஊரக பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு இன்றியமையாததாகும். கால்நடைகளுக்கு தேவையான உலர்தீவனம், பச்சை தீவனம் மற்றும் அடர் தீவனம் ஆகியவற்றை குறிப்பிட்ட விகிதத்தில் கால்நடைகளுக்கு வழங்கும் பட்சத்தில் அதன் உற்பத்தி திறன் அதிகரிக்கும். கால்நடை பண்ணையாளர்களுக்கு பண்ணை செலவினத்தில் 70% தீவனத்திற்கானதாகும்.

எனவே, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஒன்றியத்திலுள்ள 100 ஏழை கால்நடை விவசாயிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு 50% மானியத்தில் ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் பயனாளிகளாக சேருவதற்கு பயனாளி பால் உற்பத்தி கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். சொந்தமாக கால்நடை வைத்திருக்க வேண்டும். சங்கத்திற்கு பால் அளிப்பவராக இருக்க வேண்டும். தன்னுடைய மாடு சினையுற்று இருப்பின் இத்திட்டத்தில் பயனாளியாக விண்ணப்பிக்கலாம்.

அரசு விதிமுறைகளின்படி 30% ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பயனாளியாக தேர்ந் தெடுக்கப் படுவார்கள். மேலும், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 4 மாதங்களுக்கு ஒரு மாட்டிற்கு தேவையான அடர் தீவனம் 360 கிலோ மற்றும் 4 கிலோ கிராம் தாது உப்பு கலவை பெட்டகம் பயனாளிக்கு வழங்கப்படும். பயனாளியின் பங்களிப்பு தொகை ரூ.6500/ ஆகும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். சங்க அலுவலர் விண்ணப்பத்தை ஆய்வு செய்து அதன் பின்னர் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலை பெற்றவுடன் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

மேலும், தற்போது நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமிலும் விண்ண ப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. ஆகையால் கடமலைக்குண்டு, மயிலாடும் பாறை ஒன்றிய கால்நடை வளர்ப்போர் இத்திட்டத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.




■ மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் அதிநவீன மின்னணு வாகனம் வாயிலாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் விழிப்புணர்வு குறும்படத்தினை பார்வையிட்டார்கள்

# ‘மிகுந்த மனஅழுத்தத்தில் உள்ளேன்’; எனது பிரச்னையை மனித உரிமை ஆணையம் விசாரிக்க வேண்டும்:மயிலாடுதுறை டிஎஸ்பி பேட்டி

மயிலாடுதுறை, ஜூலை.20-

மயிலாடுதுறை மதுவிலக்கு டிஎஸ்பி சுந்தரேசன் இன்று காலை அலுவலகம் செல்லும் வழியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: என் மீது முந்தைய காலங்களில் நடந்த பல குற்றச்சாட்டுகளை முன் வைக்கிறார்கள். அப்போது நான் தவறு செய்திருந்தால் என்னை சஸ்பெண்ட் செய்திருக்க வேண்டும். ஆனால் என்னை இடமாற்றம் செய்கிறார்கள். ஒருவரை பிடிக்கவில்லை என்றால் கைப்பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம். இதுதான் காவலர்களின் நிலை. ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு ஊதிய உயர்வு உண்டு. எனது ஒன்பது ஊதிய உயர்வை தடுக்கின்றனர்.




என் மீது பாலியல் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகளை சொல்கிறார்கள். ஆனால் தற்போது வரை ஏன் என்னை சஸ்பெண்ட் செய்யவில்லை. என்னை விசாரிக்காமல் எப்படி டிஐஜி சஸ்பெண்ட் செய்ய பரிந்துரைக்கலாம். நான் அனைத்திற்கும் தயாராக உள்ளேன்.சென்னையில் உள்ள எனது தந்தைக்கு ஹார்ட் அட்டாக் வந்துள்ளது. இது தொடர்பாக விடுமுறை கேட்டு செல்போனில் எஸ்பிக்கு தகவல் அனுப்பி உள்ளேன். ஆனால் அவர் தற்போது வரை பதில் அளிக்கவில்லை.

தமிழக டிஜிபி ஏன் என்னை அழைத்து இன்னும் விசாரிக்கவில்லை எனவும் தெரியவில்லை. நான் காவல்துறையில் மிகுந்த மன அழுத்தத்தில் உள்ளேன். எனது உயிருக்கு ஆபத்து உள்ளது. எனக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். என் மீது தவறு இருந்தால் தூக்கில் போடவும். தேசிய மனித உரிமைகள் ஆணையம் உடனடியாக எனது பிரச்சனையை விசாரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# கப்பல் மீது ஹவுதி படைகள் 13 முறை ஏவுகணை தாக்குதல்: 26 மணி நேரம் கடலில் நீந்தி உயிர் தப்பிய குமரி சிஜஎஸ்எப் வீரர்: விடியவிடிய நடந்த திக்; திக்; நிமிடங்கள் குறித்து பரபரப்பு பேட்டி: 4 பேர் பலி, 11 பேர் மாயம், 10 பேர் மீட்பு

குமரி, ஜூலை.20-

குமரி மாவட்டம் கொல்லங்கோடு அருகே பாத்திமா நகர் மணவிளையை சேர்ந்தவர் அகஸ்டின் (56). விருப்ப ஓய்வு பெற்ற மத்திய தொழிற்பாதுகாப்பு படை (சிஜஎஸ்எப்) வீரர். இவரது மனைவி ஷீஜா கேரளாவில் உள்ள அரசு பள்ளியில் ஆசிரியையாக உள்ளார். மகன் தபால் துறையில் வேலை பார்த்து வருகிறார். மகள் பொறியியல் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார். காஸ்மோ கம்பெனியில் மெர்ச்செனட் நேவி பிரிவில் அகஸ்டின் செக்யூரிட்டி வேலை பார்த்து வருகிறார்.

இவர் வேலை பார்த்த என்டர்னிட்டி சீ என்ற கப்பல் செங்கடல் வழியாக கடந்த 7ம் தேதி சென்ற போது இஸ்ரேல் ஈரான் போர் காரணமாக ஹவுதி படைகள் கப்பலை தாக்கினர். இதில் கப்பலில் இருந்த 4 பேர் இறந்தனர். கேரளாவை சேர்ந்த ஒருவர் உட்பட கடலில் 11 பேர் மாயமாகி உள்ளனர். 26 மணி நேரம் கடலில் தத்தளித்த நிலையில் அகஸ்டின் உட்பட 10 பேர் மீட்கப்பட்டனர்.



இந்த சம்பவத்தில் தப்பிய அகஸ்டின் கடலில் 26 மணி நேரம் நீந்தி உயிர் தப்பி உள்ளானர்.

கடந்த 16ம் தேதி ஊருக்கு வந்த அகஸ்டின் உயிர் தப்பியது குறித்து கூறியதாவது: அமெரிக்காவிலிருந்து சோமாலியாவிற்கு கேழ்வரகு கொண்டு சென்ற, கிரீஸ் நாட்டை சேர்ந்த சீ கார்டியன் கம்பெனிக்கு சொந்தமான என்டர்னிட்டி சீ என்ற கப்பலில், செங்கடல் பகுதியில் இருந்து கடந்த மாதம் 27ம் தேதி செக்யூரிட்டியாக சென்றேன். சோமாலியா நாட்டில் கேழ்வரகை இறக்கி விட்டு கடந்த 7ம் தேதி திரும்ப செங்கடல் வழியாக வந்து கொண்டிருந்தோம்.

கப்பலில் 3 செக்யூரிட்டிகள், கப்பல் கேப்டன் மற்றும் ஊழியர்கள் என 25 பேர் இருந்தனர். இதில் இந்தியாவை சேர்ந்த 2 பேர், 21 பிலிப்பைன்ஸ், கிரீஸ் நாட்டை சேர்ந்த ஒருவர், ரஷ்யாவை சேர்ந்த ஒருவர் இருந்தனர். கப்பல் செங்கடலில் வடக்கில் சென்று கொண்டிருந்த போது, இரவு 7 மணியளவில் கப்பலில் அதிர்வு ஏற்பட்டது. உடனே நான் கப்பலின் மேல் தளத்தில் சென்று பார்த்த போது, மீண்டும் கப்பலில் அதிர்வு ஏற்பட்டது.

உடனே உள்ளே சென்று பார்த்த போது கப்பல் மீது ஏவுகணை தாக்குதலில் ஒரு பகுதி உருக்குலைந்து காணப்பட்டது. தொடர்ந்து 10 முறை ஏவுகணை தாக்குதல் நடந்தது. கப்பலில் இருக்கைகள் நொறுங்கி போனது. கேப்டன் அறைக்கு சென்று பார்த்த போது, கேப்டன் உட்பட 4 பேர் இறந்து கிடந்தனர். ஒருவர் கால் துண்டாகி உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். அடுத்த நாள் 8ம் தேதி காலை மீண்டும் 3 முறை ஏவுகணை தாக்குதல் நடந்தது.

உதவி கோரி தகவல் அனுப்பினோம். யாரும் வரவில்லை. இதையடுத்து உயிருடன் இருந்த நாங்கள் 21 பேரும் ரிக்கவரி படகில் வெளியே போகலாம் என்று நினைத்த போது, ஏவுகணை தாக்குதலில் கப்பலின் உள்பகுதி சேதமாகி இருந்தது. ரிக்கவரி படகையும், எமெர்ஜென்சி ஷீட்டையும் (கோட்) வெளியே எடுக்க முடியவில்லை. இதனால் லைப் ஜாக்கெட் மாட்டிக் கொண்டு காலை 10 மணிக்கு 21 பேரும் கடலில் குதித்தோம்.

நாங்கள் கடலில் நீந்தி கொண்டிருந்த போது ஒரு படகில் துப்பாக்கி ஏந்திய நிலையில் 5 பேர் அருகே வந்து பார்த்துவிட்டு திரும்ப சென்றனர். அவர்கள் யார் என்று தெரியவில்லை. கடலில் இறங்கிய போது என்னுடன் கேரள மாநிலம் காயங்குளத்தை சேர்ந்த அனில் என்பவரும் இருந்தார். அலை தாக்கம் காரணமாக தனி தனி குழுவாக பிரிந்தோம். சுமார் 26 மணி நேரம் தண்ணீரில் நீந்தி கொண்டே இருந்தோம். 9ம் தேதி காஸ்மோ கம்பெனியின் ரெக்கவரி படகு வந்து 10 பேரை மீட்டது. 12ம் தேதி மாலை வரை தேடியும் மீதி 11 பேரை மீட்க முடியவில்லை.

அதில் கேரளாவை சேர்ந்த அனிலும் உண்டு. மீட்கப்பட்ட எங்களை 14ம் தேதி சவுதி அரேபியாவில் உள்ள ஜெய்சன் துறைமுகத்தில் கொண்டு விட்டனர். அங்கிருந்து விமானம் மூலம் கடந்த 15ம் தேதி டெல்லி வந்தேன். அன்று இரவே திருவனந்தபுரம் விமான நிலையம் வந்து 16ம் தேதி ஊருக்கு வந்தேன். அமெரிக்காவில் இருந்து சோமாலியா சென்று வந்த கப்பல் என்பதால் ஹவுதி படைகள் தான் ஏவுகணை மூலம் தாக்கி உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.



# பஹல்காம் தாக்குதலுக்கும் லஷ்கர்இதொய்பாவிற்கும் தொடர்பு இல்லை: பாக். தகவல்

இஸ்லாமாபாத், ஜூலை.20-

பஹல்காம் தாக்குதலுக்கு காரணமான பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு இயங்கும் லஷ்கர் இதொய்பா அமைப்பின் கிளை அமைப்பான டிஆர்எப் பிரிவை வெளிநாட்டு தீவிரவாத அமைப்பு என அமெரிக்க அறிவித்தது அமெரிக்க அரசு. இதனை இந்தியா வரவேற்றது. இதற்கு பாகிஸ்தான் மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அரசு பகிர்ந்துள்ள தகவல் குறித்து பார்ப்போம். ”பஹல்காம் தாக்குதலுக்கும் லஷ்கர்இதொய்பாவிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அந்த அமைப்பு பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட மற்றும் செயலிழந்த அமைப்பு ஆகும். அந்த பணியை பாகிஸ்தான் அரசு கவனமாக செய்துள்ளது.

சம்பந்தப்பட்ட அமைப்பின் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், அதன் உறுப்பினர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் தீவிரவாதத்தை எதிர்க்கின்ற நாடுகளில் உலகளவில் முன்னணியில் உள்ளது. உலக அமைதி க்காக தீவிரவாத தடுப்பு நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது.

பஹல்காம் தாக்குதலில் லஷ்கருக்கு பங்கு உள்ளதாக சொல்லும் இந்தியாவிடம் ஆதாரம் ஏதுமில்லை. உலக அளவில் பாகிஸ்தானுக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் இந்தியா செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் வசித்து வரும் மக்களின் வாழ்வியல் நிலை சார்ந்த கவனத்தை இந்தியா திசை திருப்ப பார்க்கிறது” என கூறியுள்ளது.

அமெரிக்கா சொல்லியுள்ளது என்ன? அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ வெளியிட்டுள்ள அறிக்கையில், “அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம், தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (டிஆர்எப்) அமைப்பை ஒரு வெளிநாட்டு தீவிரவாத அமைப்பாகவும்(எப்டிஓ), நியமிக்கப்பட்ட உலகளாவிய தீவிரவாத அமைப்பாகவும் (எஸ்டிஜிடி) அறிவிக்கிறது. தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும், பஹல்காம் தாக்குதலுக்கு நீதி கேட்டும் அதிபர் டொனால்டு ட்ரம்ப் விடுத்த அழைப்பைச் செயல்படுத்துவதிலும் அமெரிக்க நிர்வாகம் உறுதியாக உள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (டிஆர்எப்) அமைப்பை வெளிநாட்டு தீவிரவாத அமைப்பாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளதற்கு இந்தியா பாராட்டு தெரிவித்துள்ளது.

சீனா கருத்து: தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேம்படுத்தவும், பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை கூட்டாகப் பராமரிக்கவும் பிராந்திய நாடுகளுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இயற்கை, யோகா மருத்துவர்கள் நியமனத்துக்கான மருத்துவ தேர்வு வாரியத்தின் அறிவிப்பு ரத்து

சென்னை, ஜூலை.20-

இயற்கை, யோகா மருத்துவர்கள் நியமனத்துக்கான மருத்துவ தேர்வு வாரியம் வெளியிட்ட அறிவிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. தேர்வு நடைமுறை முடிந்த பின், காலியிடங்கள் எண்ணிக்கையை 35லிருந்து 54ஆக அதிகரித்ததாக வழக்கு தொடரப்பட்டது. அவசர சூழ்நிலைகளின்போது காலியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என நீதிபதி தெரிவித்த நிலையில், தற்போது அசாதாரண சூழல் இல்லை எனக் கூறி சென்னை உயர்நீதிமன்றம் அறிவிப்பை ரத்து செய்தது. மருத்துவர்கள் சித்தார்த், அண்ணாமலை, அமிர்த செல்வராஜன் ஆகியோர் தொடர்ந்த வழக்கில் ஐகோர்ட் ஆணையிட்டது.

# பரஸ்பர நலன், சர்வதேச விவகாரங்களில் ரஷ்யா, இந்தியா, சீனா மீண்டும் இணைந்து செயல்பட முடிவு

பெய்ஜிங், ஜூலை.20-

ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய 3 நாடுகளின் தூதரகங்கள் பரஸ்பர நலன் மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசிக்க ஆர்ஐசி என்ற முறையை அமைத்திருந்தன. கரோனா பரவல் காரணமாகவும், கிழக்கு லடாக்கில் கடந்த 2020ம் ஆண்டு இந்தியா சீனா இடையே ஏற்பட்ட மோதல் காரணமாகவும் ஆர்ஜசி முறையின் செயல்பாடு தடைபட்டது.

தற்போது இந்தியா சீனா இடையே கருத்து வேறுபாடுகள் மறைந்து வருகின்றன. சமீபத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சீன பயணம் மேற்கொண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) மாநாட்டில் பங்கேற்றார். சீன அதிபர் ஜி ஜின்பிங், வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ மற்றும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கே லாவ்ரோ ஆகியோரை அவர் சந்தித்து பேசினார். இதில் ஆர்ஐசி முறையை மீண்டும் புதுப்பிக்க முடிவு செய்யப்பட்டது.

சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் லின் ஜியான் கூறுகையில், “சீனா, ரஷ்யா, இந்தியா ஆகிய 3 நாடுகள் இடையேயான ஒத்துழைப்பு பரஸ்பர நலன் மட்டும் இன்றி, உலக அமைதி, முன்னேற்றத்துக்கும் உதவும்” என்றார்.

# முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க விரும்புபவர்கள் இணையதளம் வாயிலான முன்பதிவு செய்து கொள்ளலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, ஜூலை.20-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். தமிழ்நாட்டில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை நடத்தப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 17.07.2025 அன்று 37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவு செய்யும் முன்பதிவினை தொடங்கி வைத்தார்.

கடந்த 2024ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் (Chief Minister's Trophy Games ) சிறப்பாக நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, இந்த ஆண்டு (2025) அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.08.2025 முதல் 12.09.2025 வரை நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண்,பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் என மொத்தம் 83.37 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படவுள்ளன.

முதலமைச்சர் கோப்பை தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் <https://cmtrophy.sdat.in/> / <https://sdat.tn.gov.in/> என்ற இணையதளம் வாயிலாக 16.08.2025 மாலை 6.00 மணிக்குள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

விளையாட்டில் ஆர்வம் உள்ள மாணவர்கள் தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தேனி மாவட்ட விளையாட்டு அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொள்ளலாம் அல்லது “ஆடுகளம்” தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

முதலமைச்சர் விளையாட்டுப்போட்டியில் தேனி மாவட்டத்தில் பள்ளி / கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள் அதிக அளவில் பங்குபெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்கள்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது

இராமநாதபுரம், ஜூலை.20-

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக முன்பதிவினை தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். தமிழ்நாட்டில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை நடத்தி வருகின்றார்கள்.

கடந்த 2024ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்பாக நடத்தப்பட்டன. இந்த ஆண்டு (2025) முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் 2025 (Chief Ministers Trophy Games-2025) அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.08.2025 முதல் 12.09.2025 வரை நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண்,பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் என மொத்தம் 83.37 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படவுள்ளன.

மாநில அளவில் தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும். குழு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரமும், இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட உள்ளது. இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும்.

பள்ளி பிரிவுகளுக்கு 01.01.2007 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் (6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு பயில்பவராக இருத்தல் வேண்டும்) கல்லூரி பிரிவுகளுக்கு 01.07.2000 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். (25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்) , 15 வயது முதல் 35 வயது வரை பொதுப்பிரிவினருக்கும் (35 வயது எனில் 01.01.1990 அன்று அல்லது அதற்கு பின் பிறந்தவராகவும் 15 வயது எனில் 01.01.2010 அன்று அல்லது அதற்கு முன் பிறந்தவராகவும் இருத்தல் வேண்டும்), அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

எனவே, விளையாட்டில் ஆர்வம் உள்ள அனைவரும் தவறாமல் https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொள்ளலாம். “ஆடுகளம்“ தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி ஃ கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# செயற்கை நுண்ணறிவு மூலம் வரிஏய்ப்பு கண்டுபிடிப்பு

ஹைதராபாத், ஜூலை.20-

வீடு, மனை போன்ற சொத்துகளை விற்பனை செய்யும்போது கிடைக்கும் லாபம், மூலதன ஆதாயம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வீட்டை ரூ.30 லட்சத்துக்கு வாங்கிய ஒருவர், தற்போது ரூ.80 லட்சத்துக்கு விற்கிறார் என்றால் அவருக்கு ரூ.50 லட்சம் லாபம் கிடைக்கிறது. இந்த மூலதன ஆதாயத்துக்கு அவர் வரி செலுத்த வேண்டும்.

தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்தை சேர்ந்த ஒருவர் கடந்த 2002ம் ஆண்டில் குறைந்த விலைக்கு ஒரு வீட்டை வாங்கினார். இந்த வீட்டை அவர் தற்போது ரூ.1.4 கோடிக்கு விற்பனை செய்தார். இந்த சொத்து விற்பனைக்கு அவர் மூலதன ஆதாய வரியை செலுத்த வேண்டும்.




ஆனால் வரியை செலுத்த விரும்பாத அவர், வருமான வரி கணக்கு தாக்கலில் பொய்யான தகவல்களை குறிப்பிட்டு, போலியான ஆவணங்களை சமர்ப்பித்தார். அதாவது வீட்டை மேம்படுத்த ரூ.68.7 லட்சம் செலவிட்டதாகவும் தனக்கு மூலதன ஆதாயமாக ரூ.24,774 மட்டுமே கிடைத்தது என்றும் அவர் குறிப்பிட்டு இருந்தார். வீட்டின் மேம்பாட்டு பணிக்காக செலவிட்ட தொகைக்கான ஆவணங்களையும் அவர் சமர்ப்பித்தார்.

வருமான வரித் துறை அதிகாரிகள், இந்த ஆவணங்களை செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தின் மூலம் ஆய்வு செய்தனர். அப்போது கடந்த 2002 ஜூலை 6ம் தேதியிட்ட ஓர் ஆவணம் போலியானது என்பதை ஏஐ தொழில்நுட்பம் காட்டிக் கொடுத்தது. அந்த ஆவணத்தில் காலிப்ரி எழுத்துரு பயன்படுத்தப்பட்டு இருந்தது. கடந்த 2006ம் ஆண்டில்தான் காலிப்ரி எழுத்துரு பயன்பாட்டுக்கு வந்தது.

அதற்கு முன்பு 2002ம் ஆண்டில் காலிப்ரி எழுத்துருவில் ஆவணத்தை தயார் செய்திருக்க முடியாது என்று ஏஐ சுட்டிக் காட்டியது.

இதை ஆதாரமாக வைத்து ஹைதராபாத் நபரிடம் வருமான வரித் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அவரால் அசல் ஆவணத்தை சமர்ப்பிக்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து புதிதாக வருமான வரி கணக்கை தாக்கல் செய்த அவர், மூலதன ஆதாய வரியை செலுத்தினார்.



# வேலூரில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஜூலை.20-

வேலூர் மாவட்டம், தாலுகா வேலூர் மாநகராட்சி, மண்டலம் 2, தோட்டப்பாளையம் எட்டியம்மன் மாநகராட்சி பள்ளியில் நேற்று (19.07.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மின் இணைப்பு பெயர் மாற்றம் கோரிய மனுக்களின் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு 2 பயனாளிகளுக்கு பெயர் மாற்ற ஆணையினை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி வழங்கினார். இந்நிகழ்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, 2 வது மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாநகராட்சி ஆணையர் இலட்சுமணன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, வேலூர் வட்டாட்சியர் வடிவேல், டி.பி.ஐ வெங்கடேசன் (ம2) ஏ.சி.சதீஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து துறை சார் அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## சிறுமியை கடத்தி பாலியல் பலாத்தாரம்:

# இளைஞருக்கு 10 ஆண்டு சிறை ரூ.15 ஆயிரம் அபராதம்: தென்காசி நீதிமன்றம் உத்தரவு

தென்காசி, ஜூலை. 20-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே திருவேங்கடம் பகுதியில் 16 வயது சிறுமியை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்த இளைஞருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 15 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தென்காசி நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கி உள்ளது.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள திருவேங்கடம் காவல் சரகம் கீழத்திருவேங்கடம் தெற்கு பாறைப்பட்டி பகுதியில் வசித்து வருபவர் திருமலை மன்னன் இவர் கடந்த 10.07.2020 அன்று திருவேங்கடம் காவல் நிலையத்தில் தனது பேத்தி (வயது 16/2000) என்பவரை காணவில்லை என்று புகார் கொடுத்துள்ளார்.

அவர் கொடுத்த புகாரின் பேரில் திருவேங்கடம் போலீசார் வழக்கு பதிவு செய்து மனுதாரரின் பேத்தியை தேடி பார்த்த போது திருவேங்கடம் அருகே உள்ள அம்மையார்பட்டி வடக்கு தெருவை சேர்ந்த சுப்பையா என்பவரது மகன் வெங்கடேஷ் (22/2020) என்பவர் அந்தச் சிறுமியை கடத்திச்சென்று வெம்பக்கோட்டை அருகே செல்லையாபுரம் பகுதியில் உள்ள அவரது நண்பர் வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்தது. உடனடியாக அவரை போக்சோ சட்டத்தில் கைது செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்

இந்த வழக்கின் விசாரணை தென்காசி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி பி.ராஜவேலு முன்னிலையில் நடைபெற்றது. விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் 16 வயது சிறுமியை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்த வெங்கடேஷிற்க்கு 10 வருடம் கடுங்காவல் தண்டனையும், ரூபாய் 15,000 அபராதமும் விதித்து நீதிபதி ராஜவேலு தீர்ப்பு வழங்கினார். இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞர் பி.குட்டி என்ற மருதப்பன் ஆஜராகி வாதாடினார்.

## சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# எம்.ஆர்.ஐ., ஸ்கேன் இயந்திரம் பழுதானதால் அவசர ரோயாளிகளை மதுரைக்கு அனுப்பும் நிலை ஏற்பட்டுள்ளது

சிவகங்கை, ஜூலை.20-

சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த வருடம் 2024 நவ23ல் MRI ஸ்கேன் இயந்திரம் பழுதானது. இதனால் அவசர சிகிச்சை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மூளை, தண்டுவடம், நரம்பு, எலும்புகளில் ஏற்படும் பாதிப்பை MRI ஸ்கேன் மூலம் தான் கண்டறிய முடியும். இங்கு மூளையில் பிரச்னை, மூட்டு வலி, தசை பிரச்னை, நரம்பியல் பிரச்னைகளுக்காக ஸ்கேன் எடுப்பதற்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து 20க்கும் மேற்பட்டோர் தினமும் வருகின்றனர். அரசு மருத்துவக் கல்லூரியில் முதல்வரின் காப்பீட்டு திட்டம் இருந்தாலும் பணம் கொடுத்து எடுப்பவ ர்களுக்கு மட்டுமே முன்னுரிமை தரப்பட்டது. சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் MRI ஸ்கேன் பழுது அடைந்




ததால் நோயாளிகள் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மருத்துவக் கல்லூரி நிர்வாகம் உடனடியாக பழுது அடைந்த MRI ஸ்கேன் இயந்திரத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நோயாளிகள் எதிர்பார்க்கின்றனர். கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு இளையான்குடியில் இருந்து நோயாளி ஒருவர் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு எம்ஆர்ஐ ஸ்கேன் எடுக்க சென்ற அவரை அங்கிருந்த பணியாளர்கள் மதுரைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தனர். ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு ஸ்கேன் எடுக்க செய்வது வாடிக்கையாக உள்ளது இதனால் நடுத்தர வர்க்க மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். போதுமான கட்டமைப்புகள் கொண்ட சிவகங்கை அரசு மருத்துவமனை கல்லூரியில் எம்ஆர்ஜ ஸ்கேன் இல்லை என்பது நோயாளிகள் இடையே மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது இந்த ஏமாற்றத்தை தவிர்க்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# யானைக்கு வாழைப்பழம் கொடுத்தவருக்கு ரூ.10,000 அபராதம்

சத்தியமங்கலம், ஜூலை.20-

சத்தியமங்கலம் அருகே பண்ணாரி வனப்பகுதியில் இருந்து வெளியேறி சாலையோரம் நடமாடிக் கொண்டிருந்த காட்டு யானைக்கு அவ்வழியே காரில் சென்ற பயணி ஒருவர் கீழே இறங்கி சென்று வாழைப்பழம் கொடுத்துள்ளார். அப்போது யானை அந்த நபரை துரத்தியதில் நூலிழையில் உயிர் தப்பினார். இதுதொடர்பான வீடியோ கடந்த 3 நாட்களுக்கு முன்பு சமூக வலைதளங்களில் பரவியது.

இந்நிலையில் சத்தியமங்கலம் வனத்துறையினர் யானைக்கு வாழைப்பழம் கொடுத்த நபர் பற்றி விசாரணை மேற்கொண்டதில், அவர் கோவை மாவட்டம் அன்னூர் அருகே மாதே கவுண்டன்புதூர் கிராமத்தைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (58) என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர் மீது வனத்துறையினர் வனக்குற்ற வழக்குப்பதிந்து ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து வசூலித்தனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சருக்கான விளையாட்டு போட்டி

சிவகங்கை ஜூலை 20

சிவகங்கையில் வருகின்ற 22.8.2025 முதல் 12.9.2025 வரை, 5 ஆட்சியர் பிரிவுகளில் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் நடைபெறும்

2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க, வருகின்ற 16.8.2025 ஆம் தேதிக்குள் https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in என்ற இணையதள முகவரிகளின் வாயிலாக விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கடந்த 17.7.2025 அன்று, மொத்தம் 37 கோடி ரூபாய் பரிசுத்தொகை கொண்ட, 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமான முன்பதிவினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சரால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்ந்திடும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளானது ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, கடந்த 2024 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான, மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்பாக நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து, இவ்வாண்டு (2025) முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள்2025 (Chief Minister's Trophy Games-2025), அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.08.2025 முதல் 12.09.2025 வரை நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளானது, ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண்,பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், 25 வகையான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளும், 7 வகையான மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளும், 37 வகையான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் என மொத்தம் 83.37 கோடி ரூபாய் செலவில் நடைபெறவுள்ளது.

மேலும், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரும், தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக வருகின்ற 16.08.2025 அன்று மாலை 6.00 மணிக்குள் முன்பதிவு செய்து, தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பயன்பெறலாம்.

கூடுதல் விபரங்களுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிவகங்கை மாவட்ட விளையாட்டு அலுவலகத்தினை நேரிலோ அல்லது "ஆடுகளம்" தகவல் தொடர்பு மையத்தை 95140 00777 என்ற அலைபேசி எண்ணிலோ அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி உட்கோட்டம் பார்த்திபனூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கீழ பார்த்திபனூர் கிராமத்தில் சட்ட விரோத செயல்களை தடுக்கும் விதமாக துணை கண்காணிப்பாளர் சபரிநாதன் தலைமையில் 9 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டன இந்நிகழ்ச்சியில் பார்த்திபனூர் ஆய்வாளர் கணேசன் சார்பு ஆய்வாளர் சரவணன் சிறப்பு சார்பு ஆய்வாளர் சுந்தர் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்



# வேலூர் தோட்டப்பாளையத்தில் ஸ்ரீ படவேட்டம்மன் ஆலயம் 63 ஆம் ஆண்டு ஆடி வெள்ளி திருவிழா

வேலூர், ஜூலை.20-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் தோட்டப்பாளையம் படவேட்டம்மன் கோயில் தெரு, அருள்மிகு ஸ்ரீ படவேட்டம்மன் ஆலயம் 63 ஆம் ஆண்டு ஆடி வெள்ளி தேர் திருவிழா, தலைவர், செயலாளர் ஸ்ரீ செல்வ விநாயகர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பி.செல்வமணி, பொருளாளர் மாடர்ன் ஆட்டோ சுந்தரமூர்த்தி செட்டியார் தலைமையிலும், துணைத் தலைவர்கள் எஸ்.எல்.வி. லாரி சர்வீஸ் செல்வம், எம்.ராஜசேகர், சி எல் ஆர் வெங்கடேசன், எம் சீனிவாசன், இணைச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், உமாபதி, கிருஷ்ணமூர்த்தி, ஜானகிராமன், வி.எஸ்.சண்முகம் மற்றும் இளைஞர்கள் பொதுமக்கள் முன்னிலையிலும், ஸ்ரீ அருள்மிகு படவேட்டம்மன் ஆலயத்தில் ஆடி வெள்ளி திருவிழா முன்னிட்டு, வெள்ளிக்கிழமை காலை அம்மனுக்கு கூழ் வார்த்தல் ஆடு கோழி பூஜித்து, தேர் திருவீதி உலாவும், மாலையில் அம்மனுக்கு பொங்கலுக்கு சிறப்பு பூஜைகள், இரவு மீண்டும் மேளதாளங்கள் முழங்க, நேர்த்திக்கடனாக எலுமிச்சை பழங்களை அணிவித்து நடந்த நாடன நிகழ்ச்சிகளுடன் சுவாமி ஊர்வலம், சனிக்கிழமை மாலை பாரம்பரியமிகு கலை நிகழ்ச்சிகளுடன் பரதநாட்டிய நிகழ்ச்சி வெகு விமர்சையாக ஸ்ரீ படவேட்டம்மன் ஆடி வெள்ளி திருவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சி விழா குழுவினர்கள் அதிமுக மாவட்ட மாணவரணி துணை செயலாளர் தியாகராஜன், அதிமுக ஐடி வீங் சரத்குமார், சமூக அலுவலர் தனசேகர், பாலாஜி, ஆறுமுகம், கார்த்திக், வசந்த், ஸ்டாலின், கோபி, தினேஷ், உமாசங்கர், ஊர் பொதுமக்கள், இளைஞர்கள், ஸ்ரீ படவேட்டம்மன் ஆலய கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் பெஸ்ட் பிரெண்ட்ஸ் குரூப் இளைஞர் அணி ஆகியோர் கலந்து கொண்டு இந்த ஆடிவெள்ளி பெருவிழாவை சிறப்பித்தனர்.



## 1வது வார்டு பகுதியில் அனகாபுத்தூர் மாநகராட்சி தொடக்கப்பள்ளியை


# ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்

அனகாபுத்தூர், ஜூலை.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலத்திற்கு உட்பட்ட 1வது வார்டு பகுதியில் அனகாபுத்தூர் மாநகராட்சி தொடக்கப்பள்ளியை ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சி.பாலச்சந்தர், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமார் கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி, மாமன்ற உறுப்பினர்கள் கலைவாணி, இரா.நரேஷ்கண்ணா, மதினாபேகம், சண்முகசுந்தரி வாணிஸ்ரீ, ரம்யா, சத்யா மதியழகன், திமுக நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பொருட்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் சிசிடிவி கேமரா திறப்பு விழா மற்றும் நன்கொடையாளருக்கு பாராட்டு விழா நகர் மன்ற தலைவர் சுந்தரலிங்கம் துணைத் தலைவர் ரமேஷ் முன்னிலையில் ராமநாதபுரம் சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளர் சந்தீஷ் தலைமையில் நடைபெற்றது. துணை கண்காணிப்பாளர் கௌதம் மற்றும் காவல் ஆய்வாளர்கள் சார்பு ஆய்வாளர்கள் நகராட்சி ஆணையாளர் பொறியாளர் மற்றும் பணியாளர்கள் பொதுமக்கள் சிசிடிவி கேமரா அமைப்பு மற்றும் பாதுகாப்பு குழுவினர் கலந்து கொண்டனர்



# தென்காசி மாவட்டம் வனத்துறை சார்பில் மாபெரும் நெகிழி ஒழிப்பு நிகழ்ச்சி

தென்காசி, ஜூலை.20-

தென்காசி மாவட்ட வனத்துறை சார்பில் குற்றாலத்தில் மாபெரும் நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் சுத்தம் செய்தல் நிகழ்ச்சி தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளர் உத்தரவுப்படி தென்காசி வன கோட்டம் குற்றாலம் காப்புக்காடு மற்றும் அறநிலை துறைக்கு சொந்தமான வாகன காப்பக நிறுத்துமிடங்களிலும் உள்ள நெகிழி மற்றும் பிளாஸ்டிக் பாட்டில்களை சுத்தப்படுத்தும் பணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏகே கமல் கிஷோர் அவர்கள் தலைமை வகித்தார். தென்காசி தென்காசி மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி மற்றும் உதவி வன பாதுகாப்பு அலுவலர் நெல்லை நாயகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வனத்துறை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பராசக்தி கல்லூரி மாணவ மாணவியர்கள் நெகிழி பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடமும் சுற்றுலா பயணிகளிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டு பின்பு அங்கு உள்ள நெகிழி மற்றும் பிளாஸ்டிக் பாட்டில்களை சுத்தப்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் குற்றாலம் பேரூராட்சி தலைவர் கணேஷ் தாமோதரன் மற்றும் குற்றாலம் செயல் அலுவலர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தென்காசி வனச்சரகர் செல்லத்துரை செய்திருந்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161